

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் பேரூராட்சியில் ரமலான் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் நல திட்டங்கள் வழங்கி மாவட்ட கழக செயலாளர் கா.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்பித்தார். உடன் ஒன்றிய செயலாளர் பி.சேகர், பேரூர் செயலாளர் என்.பாண்டியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.டி.சஞ்சய் காந்தி உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### மதுரை இராஜாஜி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# ரூ.313.25 கோடியில் கூடுதல் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்!

*சென்னை, மார்ச் 29-*

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த ஆண்டு மதுரை இராஜாஜி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.313.25 கோடி மதிப்பீட்டில் JICA நிதியுதவியுடன் கூடுதல் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் சட்டப் பேரவையில் நேற்று (28.03.2025) கேள்வி நேரத்தின்போது பதிலளித்தார்.



**மதுரை (மேற்கு) சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு**

மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் குழந்தைகளுக்கான இன்டர்வென்ஷனல் இருதய சிகிச்சை 2010 முதல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருதயவியல் துறையில், ஓர் உதவி பேராசிரியர் மற்றும் ஓர் இணைப் பேராசிரியர் ஆகிய இருவரும் அந்தத் துறையில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையைப் பொறுத்தவரை, கடந்த ஆண்டு நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.7.99 கோடி செலவில் ஒரு கேத்லேப் கருவியும், ரூ.2.89 கோடி செலவில் ஒரு நெஞ்சக மருத்துவப் பிரிவு கட்டிடத்தையும் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அந்த வகையில் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் 12 வயது வரையிலான 54 குழந்தைகளுக்கு இன்டர்வென்ஷல் இருதய சிகிச்சை கட்டணமின்றி, முதலமைச்சர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நடப்பாண்டில் இதுவரை 9 குழந்தைகளுக்கு இன்டர்வென்ஷனல் இருதய சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இருதய சிகிச்சை நிபுணர்கள் நியமிக்கப்பட்டு, மிகச் சிறப்பான வகையில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை இராஜாஜி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரையில், உரிய மருத்துவர்களும் உரிய மருத்துவக் கட்டமைப்பும் இருந்துக் கொண்டிருக்கிறது. என்றாலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, புதியதாக ரூ.20 கோடி மதிப்பீட்டில் 2 தளங்களுடன் கூடிய புதிய கட்டிடம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் கட்டடம் முடிக்கப்படும் தருவாயில், இன்னமும் கூடுதல் கட்டட வசதிகள் தேவைப்படுமானால், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டித் தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ரூ.313.25 கோடி மதிப்பீட்டில் JICA நிதியுதவியுடன் ஏற்கெனவே, 6 தளங்கள் கொண்ட கட்டிடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த ஆண்டு திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது. ஒரு தளத்தில் தற்போது Operation theatres முடிவுறும் தருவாயில் இருக்கிறது. திறந்து வைக்கப்பட்டதற்கு பிறகு தொடர்ந்து நான்கு, ஐந்து முறை அங்கு சென்று ஆய்வு செய்து வருகிறேன். மன்ற உறுப்பினர் மதுரை மேற்கு தொகுதியைச் சார்ந்தவர் பக்கத்திலேதான் இந்த மருத்துவமனை இருக்கிறது. நேரடியாக சென்று ஆய்வு செய்துவிட்டு, அங்கே இருக்கிற வசதிகளை எல்லாம் தெரிந்து கொண்டு அந்த மருத்துவமனையின் வசதிகள் குறித்துப் பேசுவது சிறப்பாக இருக்கும். அது மட்டுமல்ல, பணியாளர் நியமனம் குறித்து சொல்லியிருக்கிறார்கள். TNMSCயில் இந்த Krystal ஆட்கள் தூய்மைப் பணிக்கு ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் நிலையில் இருக்கிறது. இன்னும் ஒரு வார காலத்திற்குள் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புதியக் கட்டிடத்திற்கும் HR நியமிக்கும் பணியும் நிதித்துறையின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. அதுவும் இன்னும் 10 நாட்களில் முடிவுறும் என்பதைத் தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு**

மருத்துவத்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு அந்த மருத்துவமனை வளாகத்தில் பிரேத பரிசோதனைக்கூடம் அமைக்கப்பட வேண்டிய அவசியம் இருப்பின், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலைப் பெற்று அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் பதிலளித்தார்.


### பூண்டி ஒன்றியம் – கனகவல்லிபுரம் –

# திருவேலங்காடு துணை மின் நிலையம் அமைக்கும் பணியை விரைந்து முடித்திடுக!

## சட்டப்பேரவையில் திருவள்ளூர் தொகுதி வி.ஜி.இராஜேந்திரன் வலியுறுத்தல்!

*சென்னை, மார்ச் 29-*

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது திருவள்ளூர் தொகுதி உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், பூண்டி ஒன்றியம், கனகவல்லிபுரம், திருவேலங்காடு துணை மின் நிலையம் அமைக்கும் பணியை விரைந்து முடித்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.



இது குறித்த விவாதம் வருமாறு:-

**வி.ஜி. இராஜேந்திரன்:** கனகவல்லிபுரம் பூண்டி ஒன்றியத்தில் கனகவல்லிபுரத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. துணை மின் நிலையங்கள் எப்போது பயன்பாட்டிற்கு வரும் என்பதையும், திருவேலங்காடு துணை மின் நிலையம் அமைக்கும் பணி எப்போது நடைபெறும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் வி.செந்தில்பாலாஜி:** திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் உறுப்பினர் அவர்கள் 2 துணை மின் நிலையங்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த தொகுதியில் புதிய 3 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு, மூன்று நிலையங்களுக்கும் தற்போது நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 1 துணை மின் நிலையத்திற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தயார் நிலையில் உள்ளது. 2 துணை மின் நிலையங்களுக்கான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

பணிகளை விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### முதல்வர் இல்ல டெலிபோன் ஆப்ரேட்டர் டி.ஆர்.மோகனா நத்தன் தாயார்

# திருமதி என்.எஸ்.சாவித்திரி அம்மாள் மறைவு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

*சென்னை, மார்ச் 29-*

முதலமைச்சர் இல்லத்தில் டெலிபோன் ஆப்ரேட்டராக உள்ள டி.ஆர். மோகனா நத்தன் தாயார் திருமதி என்.எஸ்.சாவித்திரி அம்மாள் மறைவுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முதலமைச்சர் அவர்களின் இல்லத்தில் டெலிபோன் ஆபரேட்டராகப் பணிபுரியும் டி.ஆர்.மோகனாநத்தன் அவர்களின் தாயார் திருமதி.என்.எஸ். சாவித்திரி அம்மாள் அவர்கள், உடல்நலக்குறைவால் நேற்று (28.3.25) காலை இயற்கை எய்தியது மிகுந்த வருத்தத்தையும் வேதனையையும் தருகிறது.

திருமிகு.என்.எஸ்.சாவித்திரி அம்மாள் அவர்களின் மறைவுக்கு, எனது இரங்கலையும், அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### ஆப்பக்கூடல் பேரூர் கழகச் செயலாளர்

# கே.கோபாலகிருஷ்ணன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 29-

பவானி சட்டமன்றத் தொகுதி பவானி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆப்பக்கூடல் பேரூர் கழகச் செயலாளர் கே.கோபாலகிருஷ்ணன் மறைவிற்கு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தி வருமாறு:-

பவானி சட்டமன்றத் தொகுதி, பவானி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆப்பக்கூடல் பேரூர் கழகச் செயலாளர் கே.கோபாலகிருஷ்ணன் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்பதை அறிந்து மிகவும் துயருற்றேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் ஆப்பக்கூடல் பேரூர் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### ஆப்பக்கூடல் பேரூர்க் கழகச் செயலாளர்

# கே.கோபாலகிருஷ்ணன் விபத்தில் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

*சென்னை, மார்ச் 29*

பவானி சட்டமன்றத் தொகுதி பவானி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆப்பக்கூடல் பேரூர் கழக செயலாளர் கே.கோபாலகிருஷ்ணன் (வயது 45) அவர்கள் விபத்தில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவர் மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். கழகத்திற்காக தீவிரமாகப் பணியாற்றியவர். கலைஞர் மற்றும் முதல்வர் மீது தீவிர பற்று கொண்டவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

அவருக்கு தந்தை கந்தசாமி, தாயார் குருவாயம்மாள், மனைவி விமலா (வயது 35), மகன்கள் ஜி. பரத்வாஜ் (இறுதியாண்டு மருத்துவம்) மற்றும் ஜி.தீபக்ராஜ் இறுதியாண்டு என்ஜினீயரிங் பயின்று வருகின்றனர்.

தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள், தோழர்கள் அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 37வது நாள்!

## கொளத்தூர் கிழக்கு பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை, மார்ச் 29-*

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 37வது நாள் கொளத்தூர் கிழக்கு பகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உணவு வழங்கினார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 37 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளில் நேற்று (28.3.2025) கொளத்தூர் கிழக்கு பகுதி 1) மூகாம்பிகை சந்திப்பு, வி.வி.நகர், அன்னை சத்யா நகர், சென்னை (64வது வட்டம்) 2) பாலாஜி நகர், குமரன் நகர் சந்திப்பு, சென்னை (66வது வட்டம்) ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், கே. சாரதா, டி.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி. ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ். முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி. பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு யானை வழங்க வேண்டும்!

# அறநிலையத்துறை சார்பில் அரசு மகளிர் கல்லூரி அமைத்திடுக!

## சட்டப்பேரவையில் திருத்தணி எஸ்.சந்திரன் வலியுறுத்தல்!

*சென்னை, மார்ச் 29-*

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது கழக உறுப்பினர் எஸ்.சந்திரன், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு யானை வழங்க வேண்டும் எனவும், திருத்தணி தொகுதியில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் அரசு மகளிர் கல்லூரி அமைத்துத் தர வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.



சட்டப்பேரவையில் திருத்தணி எஸ்.சந்திரன் கேட்ட கேள்விகளும், அதற்கு அமைச்சர் பி.கே. சேகர்பாபு அளித்த பதில்களும் வருமாறு:-

**திருத்தணி எஸ்.சந்திரன்:** திருத்தணி தொகுதியில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் அரசு மகளிர் கலைக்கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** இந்து சமய அறநிலையத் துறை அறம் சார்ந்த பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காக புதிதாக திராவிட மாடல் ஆட்சி நாயகன் பதவி ஏற்றவுடன் துறையின் சார்பில் 10 கல்லூரிகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார். இந்த அறிவிப்பை பல்வேறு வகையில் தடுக்கின்ற நோக்கத்தோடு நீதிமன்றங் களில் வழக்குகள் கொடுக்கப்பட்டு வந்தன. பல்வேறு சட்ட போராட்டங்களுக்குப் பிறகு நான்கு கல்லூரிகளுக்கு அனுமதி பெறப்பட்டு தமிழக முதல்வர் அவர்களின் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியிலும், உணவுத்துறை அமைச்சர் அவர்களின் ஒட்டன்சத்திரம் தொகுதியிலும், சட்டப் பேரவை உறுப்பினர் ஈஸ்வரன் அவர்களின் திருச்செங்கோடு தொகுதியிலும், சட்டப்பேரவை உறுப்பினர் மார்க்கண்டேயன் அவர்களின் விளாத்திக்குளம் தொகுதியிலும் கல்லூரிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. நீதிமன்ற வழக்கினால் 6 கல்லூரிகளுக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் தற்போது நீதிமன்றம் ஒரு சில வழிகாட்டுதல்களை தெரிவித்துள்ளது. அந்த வழிகாட்டுதலின் அடிப்படையில் 6 கல்லூரிகளையும் இந்த ஆண்டிற்குள் தொடங்குவதற்கான நல்ல சூழலை உருவாக்கிய பிறகு நிச்சயம் திருத்தணிக்கும் ஒரு கல்லூரி ஏற்படுத்தி தரப்படும்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஜி.கே.மணி, நயினார் நாகேந்திரன் போன்றோர் இதுபோன்ற கோரிக்கையினை வைத்துள்ளனர். முதல்வர் அவர்களை நம்பினோர் இதுவரை கெட்டதில்லை, நம்பாமல் கெட்டவர்களின் எண்ணிக்கை தான் நீண்ட வரிசையாக இருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருத்தணி எஸ்.சந்திரன்:** வழக்கு முடிவடைந்த பிறகு, திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு இந்த ஆண்டு முன்னுரிமை அளிக்கப்பட்டு மகளிர் கல்லூரி செயல்படுத்துவோம் என்று தெரிவித்த அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பிலே நன்றியை தெரிவித்துக் கொண்டு, இந்த சட்டமன்ற தொகுதியை பொறுத்தவரையில் பள்ளிப்பட்டு, ராக்கிப்பட்டு உள்ளிட்ட வட்டங்கள் திருத்தணி 40 கிலோமீட்டர் தொலைவில் உள்ளதாலும் கிராமப்புற மாணவிகளின் நலனை கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் இந்த அறிவிப்பினை அளித்திருக்கின்றார்கள். அவருக்கு இந்த நேரத்தில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு அறநிலையத்துறையின் சார்பிலே பல்வேறு நல திட்டங்களை தமிழ்நாடு முதல்வரின் தலைமையில் செயல்படுத்தக்கூடிய அமைச்சர் அவர்கள் திருத்தணி முருகப் பெருமானின் ஆசியை முழுமையாக பெற்றிட அவருடைய இந்த அறிவிப்பு உதவி புரியும் என்று தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் புத்திசாலித்தனமாக கோரிக்கையை நிறைவேற்ற முற்படுகின்றார். வரவேற்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 6 கல்லூரிகளையும் பயன்பாட்டிற்கு கொண்டு வந்த பிறகு அவரது கோரிக்கையை பரிசீலித்து கல்லூரி ஏற்படுத்தப்படும் என்றுதான் அறிவித்திருக்கின்றேன். அதோடு மட்டுமில்லாமல் முருகப்பெருமான் ஆசி முழுவதுமாக கிடைக்கும் என்று சொல்லியிருக்கின்றார். தமிழ் கடவுள் முருகனுக்கு மாநாடு எடுத்த ஒரு ஆட்சி உண்டென்றால் அது திராவிட மாடல் ஆட்சியாகும். ஆகவே தமிழ் கடவுள் முருகப்பெருமான் முதல்வர் அவர்கள் தலைமையிலான இந்த ஆட்சிக்கு முழுவதுமாக ஆசி வழங்கி கொண்டு இருக்கிறார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### து. ராமதாஸ்

**மார்ச் 29 (2021)**



**தனது இளமைப் பருவத்திலேயே கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.**

**சென்னை மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் பகுதியில் வட்டச் செயலாளராகவும் – மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகப் பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்..**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**